1993 பிப்ரவரி 10]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன், 7 நாட்களுக்கு போதுமானதாக இருக்கும் என்று. ஏனென்றால் தண்ணீரை நாங்கள் கொடுக்கின்ற போது, தண்ணீர் வீணாகி விடக்கூடாது. இருக்கின்ற நிலங்களுக்கு விடப்படும் தண்ணீர் போதும் என்று அதிகாரிகள் தெரிவித்ததன் அடிப்படையிலே ஏழு நாட்களுக்குக் கொடுக்கிறோம். நான் ஏற்கனவே தெரிவித்ததுபோல, அந்தப் பயிர்களைக் காப்பாற்ற மேலும் மூன்று நாட்களுக்கு வேண்டுமென்று சொன்னால், அது கல்லணையிலே தேக்கி வைக்கிறோமா அல்லது நேரடியாக தருகிறோமா என்பது பிரச்சினையல்ல. அங்கு தண்ணீர் போக வில்லை என்ற நிலைமை இருக்குமானால் உடனடியாக அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு பயிர்களைக் காப்பாற்றுவதற்கு மேலும் 3 நாட்களுக்கு நீட்டித்துக் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. ம. சின்னசாமி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992--93 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் பின்வரும் அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11.15

1. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1974-75 மற்றும் 1975-76 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) தமிழ்நாடு மின்வாரியம் தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு (1990-91) அளித்த ஐம்பத்தைந்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கைப் பற்றிய எண்பத்தி மூன்றாவது அறிக்கை.

2. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) தமிழ்நாடு மின்வாரியம் தொடர்பான பத்திகள் குறித்து பொது நிறுவனங்கள் குழு (1991-92) அளித்த பதினேழாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய எண்பத்தி நான்காவது அறிக்கை.

(திரு. ம. சின்னசாமி) [1993 பிப்ரவரி 10

3. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1980-81 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் (வணிகம்) தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் தொடர்பான பத்தி குறித்து பொது நிறுவனங்கள் குழு (1989-90) அளித்த இருபத்திரெண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கைப் பற்றிய எண்பத்தைந்தாவது அறிக்கை.

4. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976-77 மற்றும் 1977-78 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளின் (வணிகம்) மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1991-92) முப்பதாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரை மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய எண்பத்தாறாவது அறிக்கை.

5. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் செயல்பாடு குறித்த (1992-93) ஆம் ஆண்டிற்கான எண்பத்தேழாவது அறிக்கை.

6. சட்டமுன் வடிவு (அறிமுகம் செய்தல்.)

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன் வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்தல். 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் .... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுந்தரதாஸ் நீங்கள் Technical ஆக object பண்ணுகிறீர்களா? அல்லது நான் object பண்ணுகிறேன் என்று மட்டும் சொல்லுகிறீர்களா ?

Thiru S. SUNDARADOSS: Hon. Speaker Sir I oppose the bill at the introduction stage itself.